DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 79/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : அரவிந்த் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பாலசுப்பிரமணியம் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.11.2022

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது திருப்பூர் மாவட்டம் உடுமலை உட்கோட்டம் கரட்டுர் கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 29.08.21 அன்று மதியம் 2.00 மணிக்கு உடுமலை வனச்சரக அலுவலர் போன் மூலம் தொடர்பு கொண்டு கரட்டுர் வனப்பகுதிக்குஉட்பட்ட சடையன் பாறை என்ற இடத்தில் யானை ஒன்று இறந்து உள்ளதால் பிரேத பரிசோதனை செய்வதற்காக வருமாறு தகவல் கூறி ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மாலை 5.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றபோது மாலை நேரம் ஆகிவிட்டதால் யானையின் உடலை பிரேத பரிசோதனை அன்று செய்யவில்லை. மறுநாள் 30.08.21 அன்று Assistant Director of Forest Veterinary Officer Combatiore மற்றும் நானும் அன்று காலை 11.00 மணிக்கு இறந்துபோன யானையின் பிரேத பரிசோதனை மாலை 4.00 மணி வரை ஆய்வு செய்து இறந்துபோன யானையின் உடலை வனப்பகுதிக்குள்ளேயே வனவிலங்குகளுக்கு உணவாக போட்டுவிட்டு எங்களுடைய பிரேத பரிசோதனையை முடித்துக்கொண்டேன்.

2. நான் பிரேத பரிசோதனையின்போது மேற்படி இறந்துபோன யானையின் உடல் வலது புறம் நிலத்தின் மீது சாய்ந்து இடது புறம் மேல் நோக்கிய வகையில் இருந்தது. அந்த யானையின் இடது புற தந்தம் வாயின் கடவாய் பகுதிவரை வெட்டி எடுக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. மேலும் வலது புறம் ஏற்கனவே தந்தம் அது ஒற்றை கொம்பு ஆண் யானை என்பதால் கடவாய் பகுதியில் இயற்கையாக காணப்படும் உள் தந்தம் இருந்தது. மேலும் மேற்படி யானை ஆண் யானை என்பதால் சண்டை போட்டதால் யானைக்கு உடலில் ஏதேனும் காயம் ஏற்பட்டதா என பார்த்தபோது அவ்வாறு ஏதும் ஏற்படவில்லை. மேலும் கோவை வன துறை கால் நடை உதவி இயக்குநரிடம் இருந்த metal dedecture உதவியுடன் யானையின் உடலில் துப்பாக்கியால் சுட்டு காயம் எதும் ஏற்பட்டதா என்றும் வேறு ஏதாவது ஆழமான காயங்கள் உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்தபோது அவ்வாறு எதுவும் காணப்படவில்லை.

3. மேலும் மேற்படி யானையின் வலது புற கடவாய்பகுதியில் உள் தந்தம் உள்ள பகுதிக்கும் யானையின் கண் பகுதிக்கும் இடையில் 15 மில்லி மீட்டர் சுற்றளவுள்ள ஒரு சிறிய குண்டு 5 செ. மீ ஆழத்தில் காணப்பட்டது அதேபோல மேற்படி யானையின் வலது புற கால்களில் மூன்று இடங்களில் 10 மி மீ அளவுள்ள இரும்பு குண்டு காணப்பட்டது. மேற்படி இரண்டு பகுதிகளிலும் காணப்படும் இரும்பு குண்டுகள் 5 செ.மீ ஆழத்தில் காணப்பட்டது கன்றிய காயம் எதுவும் அந்த குண்டு இருந்த பகுதியை சுற்றி காணப்படவில்லை மேலும் மேற்படி யானையின் கடவாய் பகுதி மற்றும் கால்களில் உள்ள குண்டுகளினால் யானையின் உடலில் எந்த வித அழற்ச்சியும் உடல் உறுப்புக்கள் சேதாரமாகி காணப்படவில்லை. மேலும் மேற்படி யானையின் உடல் பாகங்களை ஆய்வு செய்தபோது யானை இறந்து சுமார் 5 நாட்கள் இருக்கலாம் என்பது தெரியவந்தது அதேபோல யானையின் கல்லீரல், சிறுநீரகம், மற்றும் யானையின் குடலில் உள்ள உணவு துகள்களை ஆய்வுக்கு கோவை தடய அறிவியல் துறை ஆய்வகத்திற்கு அனுப்பினேன்.

4. யானையின் பிரேத பரிசோதனை முடித்து அதன் அறிக்கையை வனச்சரக அலுவலரிடம் கொடுத்தேன் அது சம்பந்தமாக வனச்சரக அலுவர் என்னை விசாரணை செய்தார் **அந்த அறிக்கையில் காணப்படும் இரண்டவாது கைகெயழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அட்டணை 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள விலங்ககுளில் ஒன்றான யானை இறந்தால் அரசு சார்பில் உடனடியான அது குறித்து கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றால் சரிதான். எனது மருத்துவ அறிக்கையின் படியும் நான் ஆய்வு செய்ததன் அடிப்படையிலும் யானை

இறந்து எத்தனை நாள் ஆகியிருக்கும் என்றால் யானையின் உடல் உறுப்புக்கள் அழுகும் சூழ்நிலையில் இருந்தது யானை இ றந்து சுமார் 5 நாட்கள் இருக்கலாம். இறந்து வலது புறம் சாய்ந்து படுத்த நிலையில் இருந்த யானையை பிரேத பரிசோதனை செய்ய இடது புறம் சாய்ப்பதற்கு அங்கிருந்த வன பகுதி மக்கள் உதவி செய்தார்களா என்றால் ஆமாம். சுமார் 50 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இருக்கலாம்.

2. யானையை பிரேத பரிசோதனை செய்த சடையம்பாறை என்ற இடத்தில் குடியிருப்பு சாலை காணப்பட்டதா என்றால் ஆமாம் அங்கு ஒருவர் இருந்து விவசாயம் பார்த்து வந்தார். மேற்படி சடையன் பாறை என்ற பகுதி மேடாகவும் யானை இறந்து கிடந்த இடம் கொஞ்சம் பள்ளமான நிலத்தில் இருந்தது. மேற்படி இடத்தில் இருந்து குழிப்பட்டி, பூச்சுக்கொட்டாம்பாறை, குருமலை, மேல் குருமலை ஆகிய பகுதிக்கு செல்லும் ஒரு மண் சாலை இருந்தது என்றால் சரிதான். மேற்படி இடம் வனப்பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான்.